தமிழ்நாடு சட்டமன்ற பேரவை.

திங்கட்கிழமை, 1982 பிப்ரவரி 8

தை 26, துன்மதி— திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''அழித்தூ உம் ஆவதூ உம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.''

ஒரு செயலைச் செய்யுங்கால் உண்டாகும் அழிவையும், நன்மையையும் ஆராய்ந்து, பின்னால் உண்டாகும் ஆதாயத்தையும் ஆராய்ந்து அச்செயலைச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

தமிழ்நாடு பரிசுச்சீட்டினை விற்பனை செய்யும் ஏஜண்டுகள்.

*வினா எண் 81—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் தமிழக அரசு லாட்டரி சீட்டு விற்கும் ஏஜண்டுகள் எத்தனை பேர் ?

(ஆ) கடந்த 5 ஆண்டுகளில் அவர்களுக்கு கமிஷனாக வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) லாட்டரி சீட்டு ஏராளமாய் விற்பதால் ஏஜண்டுகள் அதிகப்படுத்தப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தமிழ்நாட்டில் தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனை செய்யும் முகவர்கள் 4,243 பேர் உள்ளனர்.

(ஆ) கடந்த ஐந்து ஆண்டுகளில் முகவர்களுக்குக் கமிஷனாக ரூ. 2,42,92,425 வழங்கப்பட்டுள்ளது.

(இ) வரையறை இதுவரை போடப்படவில்லையென்றாலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் மொத்த சீட்டுகளைப் பொறுத்தும் மாவட்டத்தில் பல பாகங்களில் விற்பனையாகும் சீட்டுகளைப் பொறுத்தும் முகவர்கள் நியமனத்தை வரையறை செய்யலாம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய பரிசுச் சீட்டுகள் இங்கே அதிகமாக விற்பனையாவதால் நம்முடைய சீட்டுகளின் விற்பனை குறைந்து போகிறது. ஆகவே இன்னும் அதிகமாக ஏஜண்டுகளைப் போட்டு நம்முடைய பரிசுச் சீட்டுகளை அதிகமாக விற்பனை செய்வதன் மூலம் லாபம் அதிகமாகப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே அதுமாதிரிச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு பரிசுச் சீட்டு ஓரளவுக்கு விற்பனையாகிக் கொண்டு வருகிறது. பிற மாநில பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில் அவற்றைத் தடை செய்வதற்கில்லை. நம்முடைய பரிசுச் சீட்டுகளை அங்கே விற்பனை செய்யலாம். அவர்களுடைய பரிசுச் சீட்டுகளை நம்முடைய மாலநித்திலே விற்கலாம் என்ற முறையினை ஒரு உடன்படிக்கையின் அடிப்படையிலே பிற மாநிலச் சீட்டுகள் இங்கே விற்கப்படுகின்றன. நம்முடைய மாநில பரிசுச் சீட்டுகளை சீராக நடத்திக்கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் பொதுவாகப் பாாப்போமானால் 22 மாநிலங்களிலே பரிசுச் சீட்டுகள் அதிகமாக விற்பனையாவது நம்முடைய மாநிலமாகத்தான் இருக்கிறது. ஆகவே பிற மாநிலச் சீட்டுகள் இங்கே அதிகமாக நடமாடிக் கொண்டிருக்கின்றன.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பிற மாநில பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் அதிகமாக விற்பனை ஆகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் பிற மாநிலங்களைப் போல அதிகமான சிறப்புக் குலுக்கல் பரிசுகளை நம்முடைய மாநிலத்திலே ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே இரண்டுமுறை தான் சிறப்புக் குலுக்கல் நடத்தப்பட்டு வந்தது. இப்போது நான்கு முறைகள் சிறப்பு குலுக்கல் நடத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே திங்களுக்கொரு முறை சாதாரண பரிசுக் குலுக்கல் முறை இருந்தது சென்ற 5, 6, மாதங்களுக்கு முன்னால் 15 நாட்களுக்கு ஒரு முறையாக அதைக் கொண்டு வந்தோம். அதனால் நல்ல நிலைமை ஏற்பட்டு இருப்பதால் வருகின்ற மார்ச் திங்கள் முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டை நடத்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

1982 பிப்ரவரி 8]

திரு. பாபு. ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டில் ஏறக்குறைய 60 முதல் 65 லட்சத்திற்கு மேற்பட்ட தொகையைப்பெறாமல் இருக்கிறார்கள். அந்த எண்கள் சரியாகத் தெரியாதவர்கள் அப்படிப் பெறமுடியாமல் இருக்கிறார்கள். அதனால் அந்தத் தொகை அரசினிடத்திலே இருக்கிறது. அவர்களும் பரிசுத் தொகைகளைப் பெறக்கூடிய முறையிலே ஓரிஜினல், டியுப்ளிகேட் என்ற முறையிலே விலாசத்தை எழுதி ஏஜண்ட்கள் கொடுக்கக்கூடிய முறையை கொண்டுவந்தால் எல்லோரும் பரிசைப் பெறக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அந்த முறையை அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அந்த முறை எந்த அளவிற்குப் பயன்தரும் என்று தெரியவில்லை. வேண்டுமானால் அதை ஆராயலாம். பரிசுச் சீட்டிற்கு பரிசு விழுமேயானால் அதைப் பெறுவதற்கு 90 நாட்கள் என்று நாம் காலம் கொடுத்திருக்கிறோம். பிற மாநிலங்களிலே அந்த 90 நாட்களுக்குள் வந்து வாங்கினால் உண்டு, இல்லாவிட்டால் இல்லை. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 90 நாட்களுக்குப் பிறகுகூட அவர்கள் வந்து தக்க சான்றுகளோடு கேட்டால் பெறலாம் என்ற முறையை வைத்திருக்கிறோம். ஒரு ஆண்டுக்குள் அவர்கள் வராவிட்டால் அடுத்த ஆண்டு பெறலாம் என்று வைத்திருக்கிறோம். அதற்கான தக்க சான்றுகளுடன் வந்து நிருபித்தால் அதை ஏற்றுக் கொள்ளலாம் என்றுதான் ஆணையிட்டிருக்கிறோம்.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகள் அதிகமாக வியாபாரம் ஆவதும், நமது மாநிலப் பரிசுச் சீட்டுகள் வெளி மாநிலங்களில் அதிக அளவில் விற்பனை ஆகாமல் இருப்பதும் உண்மையா ? அது உண்மையென்றால், அதைப் போக்குவதற்கு அரசு கையாள இருக்கும் முறை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தமிழக அரசு பரிசீட்டைவிட பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் மிக அதிகமாக விற்பனை ஆகின்றன என்பது பொருள் அல்ல். நம் மாநிலத்தில் தமிழக அரசு பரிசுச் சீட்டுகள் விற்பனையாவதில் பத்திலே ஒரு பங்குதான் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் விற்பனை ஆகின்றன என்றால் பிற மாநிலங்களினுடைய பரிசுச் சீட்டுகள் அவர்களுடைய விலை 20 பங்கு 25 பங்கு இங்கே விற்பனை ஆகிறது. அந்த அளவிற்குப் பரிசுச் சீட்டுகளை வாங்குகின்ற பழக்கமும், அதைப் பயன்படுத்தும் தன்மையும் இங்கே இருப்பதன் காரணமாக, பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலப் பரிசுச்

சீட்டுகள் பிற மாநிலங்களில் விற்பதை விட அவர்களுடைய பரிசுச் சீட்டுகள் இங்கே அதிகம் விற்பனையாகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலேயும் இங்கே நம்முடைய பரிசுச் சீட்டுக்கள் தான் அதிகமாக விற்பனை ஆகின்றன.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசுப் பரிசுச் சீட்டுகளை வெளி மாநிலங்களில் விற்பனை செய்வதற்கு ஏஜெண்டுகளை நியமித்திருக்கிறார்களா ? வெளி மாநிலங்களில் எவ்வளவு பரிசுச் சீட்டுகள் விற்கப்படுகின்றன ? மற்ற மாநிலங்களின் பரிசுச் சீட்டுகள் நம்முடைய மாநிலத்தில் எவ்வளவு விற்பனை ஆகின்றன என்பதற்கு அரசினிடத்தில் விவரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எவ்வளவு விற்பனை ஆகின்றன என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால், பிற மாநிலங்களில் நம்முடைய மாநிலச் பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்ய முன்வருகின்ற முகவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மாநில விசைப்படகு கட்டும் தொழிற்சங்க இணைப்புக் குழுவின் கோரிக்கைகள்.

*வினா எண். 82—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில விசைப்படகு கட்டும் தொழிற்சங்க இணைப்புக் குழுவின் விண்ணப்பம் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22ஆம் நாள் அன்று அரசுக்கு வந்ததா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

(இ) அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் பொறுப்பிலுள்ள நான்கு படகு கட்டும் தளங்களை மூடும் யோசனையைக் கைவிட்டு மீண்டும் இவைகளை மீன்துறையின் நிர்வாகத்திற்கு மாற்றிட கோரப்பட்டுள்ளது.

(இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.